செ.வெ.எண். 47

நாள் : 17.08.2017

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

*****

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மக்களின் நலன் கருதி அற்புதமான **"அம்மா திட்டம்" (AMMA – Assured Maximum Service to Marginal People in All Villages)** என்ற திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு பயணம் செய்து நீண்ட நேரம் காத்திருந்து மனுக்களை அளிப்பதால் ஏற்படும் நேரம், செலவு மற்றும் பல்வேறு இன்னல்களை போக்குகின்ற வகையில் மக்கள் வசிக்கும் கிராமத்திற்கே வருவாய்த்துறை அலுவலர்கள் சென்று குறைகளை கேட்கும் வகையில் **"அம்மா திட்டம்"** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், வாரம் ஒரு கிராமத்தில் வெள்ளிக்கிழமை அன்று வருவாய்த்துறை சார்பில் முகாமிட்டு, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்கும் வகையில் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு வருவாய் வட்டத்தில் மக்களைத் தேடி வருவாய்த்துறை மூலம் **"அம்மா திட்டம்"** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வரும் வெள்ளிகிழமை **18.08.2017** அன்று கீழ்கண்ட வட்டங்களில் எதிரே குறிப்பிட்டுள்ள குறுவட்டத்தில் அடங்கியுள்ள வருவாய் கிராமங்களில் **"அம்மா திட்ட முகாம்"** நடைபெற தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | வட்டம் | குறுவட்டம் | வருவாய்கிராமம் |
|---|---|---|---|
| 1. | திருநெல்வேலி | மதவக்குறிச்சி | திருப்பணிகரிசல்குளம்<br>திருப்பணிநெல்லையாபுரம் |
| 2. | இராதாபுரம் | வள்ளியூர் | ஆணைகுளம் |
| 3. | அம்பாசமுத்திரம் | கடையம் | மேலக்கடையம் |
| 4. | நான்குநேரி | களக்காடு | பத்தை பகுதி-1 |
| 5. | சேரன்மகாதேவி | மேலசெவல் | நயினார்குளம்<br>கீழச்செவல் |
| 6. | பாளையங்கோட்டை | சிவந்திப்பட்டி | கிருஷ்ணாபுரம்<br>ராஜகோபாலபுரம் |
| 7. | மானூர் | மானூர் | வல்லவன்கோட்டை |
| 8. | சங்கரன்கோவில் | கரிவலம்வந்தநல்லூர் | பருவக்குடி |
| 9. | திருவேங்கடம் | திருவேங்கடம் | சுந்தரேசபுரம் |
| 10. | தென்காசி | தென்காசி | சில்லறைபுரவு |

| | | | |
|---|---|---|---|
| 11. | வீரகேரளம்புதூர் | ஊத்துமலை | முத்தம்மாள்புரம் |
| 12. | ஆலங்குளம் | வெங்கடாம்பட்டி | வெங்கடாம்பட்டி-1 |
| 13. | சிவகிரி | வாசுதேவநல்லூர் | நாராணபுரம் பகுதி-1 |
| 14. | கடையநல்லூர் | புளியங்குடி | ராமாசாமிபுரம் |

மேற்கண்ட கிராமங்களில் 18.08.2017 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை நடைபெறவுள்ள "அம்மா திட்டத்தின்" போது பொது மக்கள் கீழ்க்கண்ட தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மனுக்களை அளிக்கலாம். இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், 2. முதியோர் உதவித்தொகை உள்பட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், 3. பட்டா மாறுதல்கள், 4. உழவர் பாதுகாப்பு அட்டைகள், 5. பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், 6. சாதி சான்றிதழ்கள், 7. இருப்பிட சான்றிதழ்கள், 8. வருமான சான்றிதழ்கள், 9. நிலத்தாவாக்கள் 10. குடும்ப அட்டை,11. சாலை வசதிகள் மற்றும் குடிநீர் வசதி போன்றவைகள் தங்களது கிராமத்திற்கு கிடைத்திடும் வகையில் , வருவாய்த்துறை மக்களுக்கு ஆற்றி வரும் சேவையை துரிதப்படுத்தப்பட்டு மக்கள் பயனடைய இதன் மூலம் வழிவகை செய்யப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இம்முகாமில் தகுந்த ஆவணங்களுடன் தங்கள் கோரிக்கை குறித்த மனுக்களை முகாமில் ஆஜராகி நேரில் அளித்து பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருநெல்வேலி.

16/8/17.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி.